திரு. கொளத்தூர் கோதண்டம் : மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்று தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப்பற்றி இப்போது உத்தேசம் ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்தில் வளர்ச்சிப்பணிப் பார்வைக்கு ஒரு தலைவர் இருந்தார். அவரிடமே சீரணிப்படைப் பொறுப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : சீரணிப்படை அதிகாரியாக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற தலைவர்கள் — அரசியல்வாதிகளாக நியமிக்கப் படுகிறார்களா ? உத்தியோகப்பற்றுள்ளவர்களே நியமிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நாட்டுக்கு நல்ல பணி செய்யக்கூடிய உள்ளம் படைத்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of information, My question is specific, namely, are they officials or non-officials or are they politicians. I want a direct answer from the Government.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொண்டு உள்ளம் படைத்த உத்தியோகப் பற்றற்றவர்களை நியமித்திருக்கிறோம்.

தவிடு விநியோகம்.

* 118 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடுகளுக்குக் கார்டு பெர்மிட் முறை மூலமாக தவிடு விநியோகம் செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ? ஒரு மாட்டுக்கு எவ்வளவு தவிடு தரப்படுகிறது ?

(உ) அதைப்போல் வைக்கோலும் விநியோகிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் கேள்வி நீண்ட காலத்திற்கு முன் போடப்பட்டது. பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது மற்ற மாநிலங்களில் இருந்து மாட்டுத் தீவனம் கொண்டுவந்து விநியோகம் செய்யவேண்டிய சூழ்நிலை இருந்ததே, அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கோதுமைத் தவிடு விநியோகம் 1966 பிப்ரவரியில் இருந்து 1968 வரை இருந்தது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போட்டு நீண்ட காலம் ஆயிற்று என்று சொன்னீர்கள். லாப்ஸ் ஆகியிருந்த கேள்வியை நீங்கள்தான் 1970-இல் புதுப்பித்திருக்கிறீர்கள்.